★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 6உ திங்கள் (19—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 7உ செவ்வாய் (20—3—56) [இதழ் 236

டுனீஷிய சுதந்திரப் பிரகடனம்!

ஒப்பந்தம் நாளை கையெழுத்தாகும்

பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடிப்பில் உள்ள வட ஆப்பிரிக்க காலனிகளுள் ஒன்றான டுனீசியாவிற்கு சுதந்திரம் வழங்கும் ஒப்பந்தம், டுனிசிய தேசியக் கட்சிப் பிரதிநிதிகளுக்கும்—பிரெஞ்சு சர்க்கார் பிரதிநிதிகளுக்குமிடையில் பாரிஸ் நகரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை நாளையதினம் கையெழுத்தாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகளைப் புறக்கணிக்காதீர்

ஆட்சியாளருக்கு பொதுச்செயலாளர் எச்சரிக்கை

சம்பள உயர்வு தர சர்க்காரிடம் பணமில்லை என்பது உண்மையா?

பாழாகும் வரிப் பணம் எத்தனை கோடி?

மருத்துவமனைத் தொழிலாளர்கள் கூட்டத்தில் கேள்வி

சர்க்கார் மருத்துவ மனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற சர்க்காரிடம் பணமில்லை என்று கூறுவது நியாயந்தானா? உண்மையில் அதுதான் காரணமா? தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாமலிருப்பது எத்தனை ஆபத்தானது என்பதை எல்லாம் நமது பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மருத்துவமனைத் தொழிலாளரிடையே பேசுகையில் விளக்கினார்:—

"சென்னை சர்க்கார் மருத்துவ மனைத் தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை சர்க்காருக்கும், பொதுமக்களுக்கும் உணர்த்த இங்கு கூடியிருக்கிறார்கள்.

"தங்களது கோரிக்கைகள் இன்னின்னவை என்பதை எத்தனையோ வழிகள் மூலம் எத்தனையோ முறைகளில் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

"சங்கம் அமைத்து, தங்கள் குறைகளைக் கோரிக்கைகளாக்கி, தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள்; ஊர்வலங்கள் நடத்தி உணர்த்தியிருக்கிறார்கள்; மாநாடுகள் மூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

"சகல தொழிலாளர்களும் கையொப்பமிட்டு சட்டசபைக்கு 'மகஜர்' தந்துள்ளார்கள்; ஒரு முறை சம்பளம் வாங்காமலிருந்து, கோரிக்கைகளை வற்புறுத்தினார்கள்.

"இத்தனை செய்தும், இந்த சர்க்கார், தொழிலாளர்தம் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர முன்வரவில்லை என்றால், இந்த சர்க்காரைக் குறித்து நாம் என்ன எண்ணுவது?

"எண்ணற்ற முறைகளில் ஆண்டுக்கணக்காக, ஜனநாயக ரீதியாக கோரிக்கைகளைத் தெரிவித்தும் சர்க்கார் தங்கள் குறைகளை நிவர்த்திக்க முன்வரவில்லை என்று சொன்னால், தொழிலாளர்களின் உள்ளம் குமுறாதா?

"அந்த உள்ளக் குமுறலோடு, வேதனையோடுதான் இன்று குரல் கொடுக்கிறார்கள்—எங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், வரும் 27-ந் தேதியன்று ஒரு நாள் கண்டன வேலைநிறுத்தம் செய்யப்போவதாக!

"திடீரென இந்தத் தொழிலாளர்கள் இந்த முடிவை மேற்கொண்டுவிடவில்லை. வேறு வழி இல்லாமையால்—வேறு வழிகள் கோரிய பலனைத் தாராமையால்தான் இன்று வேலை நிறுத்தம் செய்யப் போவதாகக் கூறுகின்றனர்.

"இங்கு பேசிய மருத்துவமனைத் தொழிலாளர் சங்கத் தோழர் ஒருவர் கூறினார்—'எங்களுக்கு வேலைநிறுத்தம் செய்வதில் விருப்பமில்லை; ஆனாலும், வேறு வழியில்லை'—என்று; இங்கு பேசிய எல்லாக் கட்சித் தோழர்களும், தொழிலாளர்களின் உரிமைகளை மட்டும் வற்புறுத்துபவர்களாக இல்லை; அவர்களது கடமைகளையும் நினைப்பூட்டுபவர்கள்தான். ஆனால், 'கடமைகளை மட்டும் செய்ய வேண்டும்—உரிமைகளைப் பற்றிக் கவலைப்படக் கூடாது' என்று, சர்க்கார் கருதினால் என்ன செய்வது?

"நாட்டு மக்களின் பிணி போக்கும் இந்த மருத்துவமனைத் தொழிலாளர்கள் வேறு தொழிலாளர்களைவிட இயல்பாகவே அதிகமான பொறுமையுடையவர்கள்.

"ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் பணிபுரிபவர்கள் சிறிது பொறுமை இழப்பதுகூட சாத்தியம்தான்; ஆனால் இந்த மருத்துவமனைத் தொழிலாளர்கள் அப்படி அல்ல; ஓயாது தொல்லை தரும் நோயாளியைக் கவனிக்க வேண்டியவர்கள்—கவனிப்பவர்கள். நோயாளிகள் எத்தனைதான் தொல்லைதந்தாலும் அதை சகித்துக்கொண்டு பணிபுரிய வேண்டியவர்கள். அதற்கேற்ப தங்கள் உள்ளத்தைப் பண்படுத்திக்கொண்டவர்கள். இயல்பாகவே பொறுமையானவர்கள். பொறுமையோடிருக்கப் பழகியவர்கள் அவர்கள்தான். நாட்டு மக்களின் பிணி போக்கும் அந்த தொழிலாளர்கள்தான், தங்கள் பசிப் பிணியைப் போக்குமாறு சர்க்காரைக் கேட்கிறார்கள்.

"தங்களுக்குத் தரப்படும் குறைந்த ஊதியத்தைக் கொண்டு, வாழ்க்கை நடத்த முடியாதிருக்கும் அவல நிலையை—ஒழுகும் ஓட்டைக் குடிசையை—ஒட்டிய கன்னமும், உள்விழுந்த கண்ணுமாய் காட்சி தரும் குழந்தைகளை—இராப் பட்டினி, அரைப் பட்டினி நிலைகளை எடுத்துக்காட்டி, தங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

மீண்டும் முத்தான வாய் திறந்தாராம் முதன் மந்திரி

வசை பாடினாராம் கூட்டணி மீது!

சென்னை, மார்ச் 19—

முதன் மந்திரி காமராசர் மீண்டும் தன் முத்தான வாய் திறந்து, கூட்டணிமீது மீண்டும் வசை பொழிந்திருக்கிறார்—நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில்.

இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டியதே முதன்மையான கடமையாம்! இந்திய ஒற்றுமையைச் சீர்குலைக்க முயற்சிக்கும் எந்த ஒரு அழிவுச் சக்திக்கும் துளியும் இடம்தரக் கூடாதாம்!

இப்படிப் பீடிகை போட்டிருக்கிறார், காமராசர்.

"மொழி அடிப்படையில் தமிழ் மாநிலம் அமைக்க வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் கூட்டணி; ஆனால், அந்தக் கூட்டணியில் உள்ள ஒரு 'கோஷ்டி'யினரின் உண்மையான நோக்கம் எல்லாம், சுதந்திரமான தமிழ் நாடு அமைப்பதற்காகக் 'கூட்டணி'யைப் பயன்படுத்த வேண்டுமென்பதுதான்"—என்று கூறி காமராசர், தனது அபாரமான அரசியல் வியூகத்தை வெளிக்காட்டினாராம்!

தேவிகுளம், பீர்மேடு தமிழர்களைக் காங்கிரஸ் கைவிட்டுவிட்டதாக இந்தக் கூட்டு முன்னணியினர் தவறான பிரச்சாரம் (!) செய்கின்றார்கள்; மக்கள் அதனை நம்பக்கூடாது; ஏனெனில், இந்தக் கூட்டணியே ஒரு விசித்திரமானதாகும். கூட்டணியில், கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள், திராவிடர் முன்னேற்றக் கழகத்தவர், இவர்கள் எல்லாம் ஒன்றுகூடியிருக்கிறார்கள். இவர்கள் மட்டுமின்றி முன்னாள் நீதிக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். மேலும் இந்தக் கூட்டணியில், காங்கிரஸ் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்த போது வாளாவிருந்தவர்களும் மற்றும், வெள்ளையருடன் சேர்ந்துகொண்டு அவர்களுக்காக வேலை செய்தவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அத்தகையவர்கள், சுதந்திரத்திற்காக மகத்தான தியாகங்கள் புரிந்த காங்கிரசைக் கண்டிக்க முன்வருவது கேலிக்குரியதாகும்"—என்றும் பேசி காமராசர், தனது கடந்த கால அரசியல் அனுபவத்தால் பெற்ற ஞானத்தைப் பளிச்செனப் பலருக்கும் தெரியுமாறு வெளிச்சம் போட்டுக் காட்டினாராம்.

புதிய கிளர்ச்சியும், பிரச்சாரமும் வெறும் தேர்தல் தந்திரங்கள்தான். கூட்டணியில் இடம் பெற்றிருப்பவர்கள் விசித்திரமான 'நண்பர்'கள். அவர்களிடத்தில் அடிப்படை ஒற்றுமை ஏதும் கிடையாது. தங்கள் ஒற்றுமையைப் பற்றி அவர்களே அடிக்கடி கூறிக்கொள்வது, அவர்களது பலவீனத்தையே காட்டுகிறது. எங்கே பிளவு ஏற்பட்டு விடுமோ வென்று அவர்களே அஞ்சுகிறார்கள்"—என்று கூறி, தனது 'தீர்க்கதரிசன'த்தைக் காட்டிக் கொண்டாராம், காமராசர்!

"பொதுமக்கள், கூட்டணியின் தவறான பிரச்சாரத்திற்கு செவிசாய்க்கக் கூடாது. தவறான பிரச்சாரத்தில் உள்ள ஆர்வத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

"மொழி அடிப்படையில் தமிழ்நாடு வேண்டுமெனக் கோரும் கூட்டணியில் உள்ள ஒரு கோஷ்டி, கூட்டணியைத் தனது தனித் தமிழ்நாடு அமைக்கும் இலட்சியத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ள கூட்டணியை ஒரு படிக்கட்டாக உபயோகிக்கவே எண்ணம் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு திருட்டுத்தனமான நடவடிக்கையாகும். இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பது என்பதுதான் இப்போதுள்ள தலையாய கடனாகும். எனவே, ஒற்றுமையைச் சீரழிக்க எவரையும் அனுமதிக்கக் கூடாது," என்று வேறு ஓலமிட்டாராம், காமராசர்!

'எல்லைத் தகராறு பற்றிய கிளர்ச்சிகளில் ஈடுபடக் கூடாது' என்று கம்யூனிஸ்டுகளுக்கும்—சோஷலிஸ்டுகளுக்கும அவர்கள் கட்சியின் மேலிடத்திலிருந்து தாக்கீது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்கள் கூட்டணியில் தொடர்ந்து இருக்க முடியாது. எஞ்சுபவர்கள் தமிழரசுக் கழகத்தவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தவரும்தான். அவர்களும் நீடித்த காலத்திற்கு ஒன்றுபட்டிருக்க மாட்டார்கள்—என்று, காமராசர் சபித்திருப்பதின் மூலம், கூட்டணி கண்டு அவர் கொண்டுள்ள கலக்கத்தையும், அருவெறுப்பையும் வெளிக்காட்டிக்கொண்டாராம்!

ஒழுக்கக்கேடும், திறமையின்மையும் ஊஞ்சலாடுகிறதாம்!

பக்ஷி குலாம் ஆட்சியின் அலங்கோலம்

காஷ்மீர்சட்டசபையில் சீக்கியஉறுப்பினர் குற்றச்சாட்டு

ஜம்மு, மார்ச் 15—

"ஒழுக்கக் குறைவு, திறமையின்மை, மிஞ்சிய தாமதம் ஆகிய மூன்றுந்தான், தற்கால நிர்வாகத்தின் நடைமுறைகளாக இருந்து வருகின்றன."

"போதனு மொழியாகப் பஞ்சாபியை மேற்கொள்ளுவது குறித்து ஆராய்ந்து முடிவு கட்டுவதற்கு ஒரு ஆய்வுக் குழுவை நியமிக்க வேண்டும்."

—இக்கருத்துக்களை காஷ்மீர் சட்டசபையில் அர்பான் சிங் அசாத் என்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

'பட்ஜட்' விவாதத்தின்போது அவர், புனிதம், திறமை, துரிதம் முதலியன நிர்வாகத்தில் இடம் பெறவேண்டும் என வலியுறுத்திக் கூறினார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—3—'56 திங்கள்

'அறத்தின் நீங்கிய அரக்கன்'

(3)

தம்மம்பட்டித் துப்பாக்கிப் பிரயோகம் பற்றிக் கேட்கப் பட்ட கேள்விக்கு, ... நபர் கள் தடிகளைத் தாங்கி... டுத் தடை உத்தரவுக்கு ...ராக ஊர்வலமாக வந்தனர்' ...ப் பதில் தந்து இருக்கிறா... நிதி அமைச்சர் சுப்பிரமணியம். அதுவுமன்றி, கலைந்து செல்லும் படி சப்-இன்ஸ்பெக்டர் எச்ச ரித்தும்கூட, ஊர்வலத்தினர் கலைந்து செல்லாதுபோகவே, சப்-இன்ஸ்பெக்டர் ஆணைப்படி இரண்டுமுறை சுடப்பட்டதாக வும் அமைச்சர் கூறியுள்ளார்.

மேற்குறித்தத் துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென்று சட்ட சபையில் வேண்டிக்கொள்ளப் பட்டதற்கு, நாமக்கல் ரெவி னியூ டிவிஷனல் அதிகாரி விசா ரணை செய்ததாகவும், துப்பாக் கிப் பிரயோகம் அவசிய மானதே என அறிவித்திருப்ப தாகவும் அமைச்சர் அறிவித் துள்ளார்.

மேற்குறிப்பிட்டுள்ள அமைச்சரின் கூற்றில் காணக் கிடப்பது பொய்யா, மெய்யா என்பதை ஆராய்வோம்.

ஊர்வலத்தில் 750 நபர்கள் கலந்துகொண்டனர் என்பது நூற்றுக்கு நூறும் பொய். ஏற் கனவே வேலைநிறுத்தம் நடை பெற்ற இரண்டு நாள் கழித்து 'தினமணி' இதழ் தந்த செய் திக்கும், நாமக்கல் வட்டார போலீஸ் துறையினர் கொடுத் தத் தகவலை ஆதாரமாகக் கொண்டு சட்டசபையில் நிதி அமைச்சர் உறுதிசெய்யும் பேச்சுக்கும் ஒரு துளியும் வித்தியாசத்தைக் காணோம். 'வேலிக்கு ஓணான் சாட்சி; ஓணானுக்கு வேலி சாட்சி' என்ற ரீதியிலேயே, 'தினமணி' இதழின் செய்தியும், போலீஸ் துறையினரின் தகவலும் இணைந்திருக்கிறது!

ஊர்வலத்தில் இருந்த நபர் களின் எண்ணிக்கை எத்தனை மடங்குக் கூட்டப்பட்டிருக் கிறதோ, அதுபோன்றே அவர் கள் கரங்களில் தடிகளை வைத் திருந்தனர் எனும் நிதி அமைச்சர் கூற்றும், கடைந் தெடுத்தப் பொய்யாகவே இருக் கிறது.

போதிய எச்சரிக்கைக்குப் பின்னரே, சப்-இன்ஸ்பெக்டர் ஊர்வலத்தினரை நோக்கி சுட உத்தரவிட்டார் எனும் அமைச் சர் அறிவிப்பும், முதல்தரமா னப் பித்தலாட்டமாகும்.

தடைஉத்தரவைமீறும் நோக் குடன் ஊர்வலம் வந்தனர் எனும் அமைச்சரின் சாதனை, இத்தொடர்பில், அவர் கூறிய பொய்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போலாகும்.

தம்மம்பட்டியில் நடைபெற்ற பொது வேலைநிறுத்த ஊர்வல மும், பழி வாங்கும் வெறித் தனத்துடன் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கோபால கிருஷ்ண அய்யர் பேய்க்குணம் கொண்டு ஆடியுள்ள நரவேட் டையும் பற்றி, நமது திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரர்களில் ஒருவரான தோழர் மதியழகன் அவர்கள், தம்மம் பட்டிக்கு நேரில் சென்று, ஊர் மக்களைக் கேட்டறிந்து வந்தச் செய்தியை, அறிக்கை உருவில் நாம் ஏற்கனவே வெளி யிட்டுள்ளோம். அதிலுள்ள முக்கியமான பகுதிகளை இங்கு வெளியிடுகிறோம்.

தடை உத்தரவை மீறும் எண்ணத்துடன் ஊர்வலம் வந் தனர் என்று, சட்ட சபையில் நிதி அமைச்சர், மகா நாணயம் போல் கூறினாரே, அதை உடைத்தெறியும் வகையில் நண்பர் மதியழகன் அவர்க ளின் அறிக்கைக் குறிப்பிடுவ தைக் காணுங்கள் :—

"தம்மம்பட்டித் தோழர்கள் பிப். 20-ல் பொது வேலை நிறுத்தம் செய்து ஊர்வலம் நடத்துவதற்காக திடீரென்று விதிக்கப்பட்ட—சர்க்கார் அனுமதி வாங்கி ஊர்வலம் நடத்த வேண்டும்—என்ற தடையுத்தரவுக்கு இணங்க 19-ந் தேதியன்று மூன்று தோழர்கள் டிப்டி—சூப்பிரண் டென்டிடம் அனுமதி வாங்கி தம்மம்பட்டி சப்-இன்ஸ்பெக் டருக்கு அனுப்ப வேண்டிய பிரதியையும் நேரிலேயே எடுத்துக்கொண்டு பிப். 20ந் தேதி காலை 7-30 மணிக்குத் தம்மம்பட்டி போலீஸ் நிலை யத்திற்கு வந்துள்ளனர். இப்படி வந்த மூன்று தோழர் களாகிய ஜம்புலிங்கம் (சோ) செம்பையா, சத்தியநாரா யணன் (கம்.) ஆகியோரைக் கைது செய்து போலீஸ் நிலை யத்திலேயே காவலில் வைத் தனர்.

"தோழர்கள், 'சம்மந்தப்பட்ட மேலதிகாரிகளிடமிருந்து ஊர் வலம் நடத்த அனுமதி பெற் றிருக்கிறோம்; எனவே, ஏற் பாடு செய்தபடி ஊர்வலம் அமைதியாக நடைபெறும்' என்று தெரிவித்தனர்; என் றாலும், சப்-இன்ஸ்பெக்டர் ஊர்வலம் நடத்துவதைக் கண்டிப்பாக அனுமதிக்க மறுத்துவிட்டார்."

ஊர்வலத்தினர், கரங்களில் தடிகளேந்தி வந்ததாகவும், கலக உணர்ச்சியுடன் இருந்ததாக வும், தகுந்த எச்சரிக்கைக்குப் பின்னரே சுட ஆணை இட்ட தாகவும் அமைச்சர் கதைத் தாரே சட்டசபையில், அப் பித்தலாட்டத்தின் முகமூடி யைக் கிழித்தெறியும் வகையில் அறிக்கையின் பகுதி இருக் கிறது. அது இதோ :—

"இருந்தாலும், மேலதிகாரி யின் அனுமதி பெற்றிருந்த காரணத்தினால், மாலை 4 மணிக்கு, சுமார் 70 பேர் தம்மம்பட்டி தெருக்களில் ஊர்வலமாக, அமைதியாக வந்துகொண்டிருந்தனர். போலீஸ் நிலையத்திற்கு $2\frac{1}{2}$ பர்லாங் தூரத்தில் ஊர்வலம் வந்துகொண்டிருந்த தெரு விற்குக் குறுக்கேயுள்ள ஓர் சந்திலிருந்து துப்பாக்கியேந் திய போலீஸ்படையுடன் சப்-இன்ஸ்பெக்டர் அணி வகுத்து ஊர்வலத்தை மறித்து நிறுத்தினார். '3 நிமி டங்களில் கலைந்து ஓடிவிடுங் கள்; இல்லாவிட்டால் துப் பாக்கிப் பிரயோகம் செய் வேன்' என்று சொல்லிக் கொண்டே துப்பாக்கிப் பிர யோகத்திற்கு உத்தரவிட் டார்; துப்பாக்கிக் குண்டுகள் வெடித்தன; கூட்டம் சிதறி யது; நான்கு தோழர்கள் குண்டு பாய்ந்து, படுகாய முற்று கீழே விழுந்தனர்."

ஊர்வலத்தில் கலந்துகொண் டவர்கள் கரங்களில் கழி ஏந்தி, கலக உணர்ச்சியோடு இருந்த னர் என்பதற்காகவும், எவை வருமோ, எது நேர்ந்திடுமோ என்றப் பேரச்சத்தின் காரண மாகவே, எச்சரிக்கைச் செய்து விட்டுத் துப்பாக்கிப் பிரயோ கம் செய்திருக்கிறார், காந்திய வழிவந்த காமராசர் ஆட்சியின் பாதுகாவலர்களில் ஒருவரான தம்மம்பட்டி கோபுரந்தாங்கி கோபாலகிருஷ்ண அய்யர் என்றே ஒப்புக்கொள்வதானா லும், துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகி, குருதி பெருக்கெடுக் கும் நிலையில், பிணம்போல் மண்ணில் வீழ்ந்துகிடக்கும் தமிழ் வீரக் காளைகள்பால் இரக்கம் காட்டாது, அதிகார மரபுப்படி உடனடியாக சிகிச் சைக்கு ஏற்பாடு செய்யாது இருந்துள்ள அதிகாரியின் புலிக்குணத்தை, பழிவாங்கும் நரித்தனத்தை, இரத்த வெறித் தனத்தை, எவர்தான் நியாய மானது என ஏற்றுக்கொள்ளு வர்?

சப்-இன்ஸ்பெக்டர் கோபால கிருஷ்ண அய்யர் நடந்துகொண்ட விதம் பற்றி நண்பரின் அறிக்கை தரும் விளக்கம் இது :—

"'அவர்கள் அருகில் எவரும் நெருங்கக்கூடாது' என்று எச்சரித்துவிட்டுப் போலீசார் இடத்தைவிட்டு அகன்றனர். நெடுநேரம் பிணங்கள் போல் மயக்கமுற்று இரத்த வெள் ளம் மண்ணில் புரள, அங் கேயே குண்டடிப்பட்ட தோழர்கள் கிடந்தனர்.

"இவர்களில் இராமலிங்கம் என்ற தோழருக்கு இடது தொடையில் பின்னாலிருந்து குண்டு பொத்துக்கொண்டு போயிருக்கிறது; 'மயிரிழை யில் மரணத்தின் பிடியிலி ருந்து தப்பினார்,' என்று டாக் டர்கள் அபிப்பிராயப்படு கின்றனர்.

"ஜி. ஏ. பெரியசாமி என்பவ ருக்குக் குண்டு தொடை யில் கிழித்துக்கொண்டு உள்ளே சென்றுள்ளது.

"பொன்னுசாமி என்பவர் அரும்பு மீசைகூட முளைக் காத 14 வயது சிறுவர்; அவர்மீது பட்ட குண்டு வலது தொடையைத் துளைத்து இடது தொடை யையும் துளைத்துக் காயப் படுத்தியுள்ளது.

"பாண்டுரங்கன் என்பவருக்கு வலது கரத்தில் காயம்பட் டுள்ளது.

"இவர்களின் அருகே மக்கள் யாரும் நெருங்கவில்லை.

"அது நடந்த காலம் மாலை 5-30 மணி.

"பிறகு போலீசார் லாரியில் ஏற்றி 18 மைல்களுக்கப்பா லுள்ள ஆத்தூர் அரசாங்க மருத்துவமனையில் அவர்களை ஒப்படைத்தனர்; அங்கு அவர்கள் கைது செய்யப் பட்டு, இரும்புத் தொப்பி அணிந்த போலீசார் காவல் புரிய வைக்கப்பட்டுள்ளனர். யாரும் பார்க்க அனுமதிக்கப் படவில்லை.

"நேற்று மாலை 1 மணிக்கு நானும், நண்பர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., அவர்களும் சப்-மாஜிஸ்தி ரேட் அனுமதி பெற்று, ஆத் தூர் ஆஸ்பத்திரியில் வைக் கப்பட்டிருக்கும் தோழர்கள் இராமலிங்கம், பெரியசாமி, பொன்னுசாமி ஆகியோ ரைப் பார்த்தோம்; அவர் கள் கோலத்தைக் கண்டு நான் பதறிப்போனேன். அந் தக் காயங்களைத்தான் 'தின மணி' 'இலேசான காயங் கள்' என்று தலைப்புக் கொடுத்துப் பிரசுரித்திருக் கிறது."

ஊர்வலக் கூட்டத்தில் 750 நபர்கள் இருந்தனர் என்று சாதித்தாரே சட்டசபையில் அமைச்சர், அது எத்தகைய அப்பட்டமான உண்மையற் றது என்பதை எடுத்துக்காட் டும் நண்பரின் அறிக்கைப் பகுதி வருமாறு :—

"60 அல்லது 70 பேர் உள்ள ஊர்வலத்தை, மிகுந்த அக்கரை யெடுத்துக்கொண்டு, '750 பேர்கள் கொண்ட ஊர்வலம் என்று பிரசுரித்திருக்கும் பத் திரிகைகளின் மற்றச் செய்தி களும் இப்படித்தானிருக்கும்' என்று தம்மம்பட்டி வட்டா ரமே கண்டிப்பதைக் காதாரக் கேட்டேன்."

அமைதியாக ஊர்வலம் வந் தத் தமிழினக் குமரர்களை வேண்டுமென்றே துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கி, தனது அரிப்பு உள்ளத்திற்குச் சாந்தித் தேடிக் கொண்டுள் ளாரே சப்-இன்ஸ்பெக்டர், அவர் செயல் பற்றியும், அவர் ஆடிய நரவேட்டைக்குப் பின் னர் தம்மம்பட்டி மக்கள் பெற் றுள்ள நிலை குறித்தும், அவ்வூர் மக்களின் கருத்து என்ன என் பதை தோழர் மதியழகன் படம் பிடித்துக் காட்டுகிறார். படியுங்கள் :—

"மாலை 3 மணிக்கு தம்மம்பட் டிக்குச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடத்தை யும், மற்ற விபரங்களையும் பார்த்தேன் இரத்தம் தோய்ந்த மண்ணை போலீ சார் அப்புறப்படுத்தியுள்ள னர். அந்த இடத்திற்கும்— போலீஸ் நிலையத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை; மூன்று வீதிகளுக்கு அப்பால் 16 அடிதான் அகலமுள்ள தெருவில் மனிதவேட்டை நடந்துள்ளது. 'இதற்கு எவ் வித நியாயமும் கிடையாது' என்று ஊர் மக்கள் எடுத்துச் சொன்னார்கள்

"'சப்-இன்ஸ்பெக்டர் கோபால கிருஷ்ண அய்யர், தமக்குப் பிடிக்காத சில கொள்கைகள் மீது உள்ள வெறுப்பால், அண்மையில் சர்க்காரும், முதலமைச்சரும் பொது வேலை நிறுத்தம் குறித்து விடுத்த அறிக்கைகளை போர்வையாகக் கொண்டு, அத்துமீறிய நடவடிக்கை களில் ஈடுபட்டார்' என்று நான் சந்தித்த சகலரும் எடுத்துச் சொன்னார்கள்.

"ஊர் புயலடித்து ஓய்ந்தது போல் காட்சியளிக்கிறது மக்களும், தாய்மார்களும், 'காட்டரசனின் ஆட்சியில் வாழ்கிறோமா? நாகரீக நாட் டில் உள்ளோமா?' என்று பீதியடைந்துள்ளனர்."

சட்டசபையில் அமைச்சர் கூறிய கூற்றில் எத்தனை சத விகிதம் உண்மை இருக்கிறது என்பதில் முடிவுகட்டும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம். எனவே, 'அறத்தின் நீங்கிய இரக்க மென்ற ஒரு பொருளிலா அரக்கன்' என்று நிதி அமைச் சரை, எந்தத் தமிழ் மகன்தான் கூறாமல் இருப்பான்?

காங்கிரஸ் நிர்வாகத்தில் தலைமுதல் கால்வரை ஊழல்கள்

சென்னை மக்கள் வரிப்பணம் பல இலட்சம் பாழ்

சர்க்கார் துறை ஒழுங்கீனங்கள்குறித்து குழு அறிக்கை

"காங்கிரஸ் நிர்வாகத்தில் தலை முதல் கால்வரை ஒரே ஊழல் மயமாயிருக்கிறது.

'டெல்லி சர்க்கார் மட்டும் கோடிக்கணக்கான

(4-ம் பக்கம் பார்க்க)

என்.வி. நடராசன் சொற்பொழிவு

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மணியத்தைப் பாராட்டுகிறார். ஆனால், ஆச்சாரியார் ஒன்றை மறந்து விடக்கூடாது—'காங் கிரஸ் தலைவர்கள் கூறினால் நாட் டவர் ஆதரிப்பார்கள்' என்று தவறான கணக்குப்போட வேண்டாம். கடந்த பிப் 20-ல் தமிழகமெங்கும் வெற்றிகரமாக நடைபெற்ற பொது வேலை நிறுத்தம், 'தட்சிணப்பிரதேச யோசனையை தமிழ் மக்கள் நிராகரிக்கிறார்கள்— கண்டிக்கி றார்கள்—கைவிடக்கோருகிறார் கள்' என்பதை தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

"ஆகவே, காமராசர் ஆத ரித்துப் பேசிவிட்டால், தமிழ் மக்கள் தட்சிணப் பிரதேசத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று எவரும் எண்ணிக்கொண் டிருக்க வேண்டாம்.

"'சட்டசபையின் கருத்தை மக்கள் கருத்து என்று நான் ஏற்றுக்கொள்வேன்,' என்று பேசியிருக்கிறார் —ஆச்சாரியா ரின் சிஷ்யரான சுப்பிரமணியம்! 'சட்டசபைகளின் கருத்தைத் தான் மக்கள் கருத்து என்று ஏற்பேன்' என்பது உண்மை யானால், சுப்பிரமணியத்திற்கு நாம் கவனப்படுத்த விரும்பு கிறோம் — சட்டசபையின் சென்ற கூட்டத்தில்தானே, தேவிகுளம்—பீர்மேடு தமிழ கத்திற்கு வேண்டுமென்று ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட் டது; அந்தத் தீர்மானம் என்ன ஆயிற்று? அங்கு, எல்லா மக்க ளின் பிரதிநிதிகளாக வீற்றிருப் பதாகக் கூறப்படும் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒரு மித்துத் தெரிவித்த கருத்தை அமுல் செய்ய, கோரிக் கையை நிறைவேற்ற கனம் சுப்பிரமணியம் செய்தது என்ன? சட்டசபையின் கருத் துத்தான் மக்களின் கருத்தா னால் அங்கு நிறைவேற்றிய தீர் மானம் கோரிய பலனைப் பெற வில்லையே, என்ன செய்யப் போகிறார், சுப்பிரமணியம்?

"மேலும், தட்சிணப் பிர தேசம் வேண்டுமெனப் பேசும் ஆச்சாரிசார், 'தட்சிணப் பிர தேசமும் — திராவிட நாடும் ஒன்று' என்று பேசுகிறார். 'ஒன்று அல்ல—வேறு வேறு' என்பதை நாம் தெளிவாக்கி யிருக்கிறோம். ஆச்சாரியார், வடநாட்டு ஆதிக்கப் பிடிப்பி லிருந்து நீங்கிய தட்சிணப் பிர தேசம் வேண்டுமெனக் கூற வில்லை என்பதையும் நாம் நினைப்பூட்டுகிறோம்."

தொடர்ந்து பேசிய துணைப் பொதுச் செயலாளர் அவர்கள் கழகக் கொள்கைகளையும், இன் றைய வளர்ச்சியையும் குறிப் பிட்டு, கழகத்தில் திராவிட பெருங்குடி மக்கள் பெருவாரி யாக உறுப்பினர்களாக வேண் டும் என்று கேட்டுக்கொண் டார்.

பட்டத்தின் பதவி ஆசை!

மீண்டும் மந்திரி சபை அமைக்க முயற்சி?

பட்டம் தாணு தான் திரு-கொச்சியில், மீண்டும் மந்திரி சபை அமைக்க முடியும் என்று நம்புவதில்—அமைக்க வேண்டும் என்று ஆசைப்படுவதில் அவரை அறிந்தோருக்கு ஆச்சரியமிருக்காது.

பி. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழு, 'திரு-கொச்சி, பி. சோ. கட்சி மந்திரி சபை அமைக்கவேகூடாது' என்று முழுவது மாகத் தடுத்துவிடவில்லை; 'எந்தக் கட்சியுடனும் சேர்ந்து மந்திரி சபை அமைக்கக்கூடாது' என்று தான் கூறியிருக்கிறது—என்று வியாக்கியானம் செய்திருக்கிறார் பட்டம்

டில்லியிலிருந்து திருவனந்தபுரம் திரும்பிய அவர், இப்போது மந்திரி சபை அமைப்பது குறித்த சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்.

'சூழ்நிலைகள் சாதகமாக அமையுமானால், பி. சோ. கட்சி மீண்டும் மந்திரி சபை அமைக்கும்' என்றும் அவர் பேசினாராம்!

திரு- கொச்சி கோஷ்டி காங்கிரசின் தலைவரான வர்கீசுடன் பட்டம்தாணுபிள்ளை மந்திரி சபை அமைப்புக் குறித்துப் பேசினாராம் பி. சோ. கட்சி மந்திரி சபை அமைத்தால் கோஷ்டி காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் ஆறு பேர்களும் ஆதரிப்பார்களா என்பது பற்றியே விவாதமாம்.

கம்யூனிஸ்டுகள் அல்லாத இடதுசாரி கூட்டு மந்திரி சபை அமையுமானால், திரு-கொச்சி சட்டசபை கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் ஆதரவு தருவார்கள் என்று கம்யூனிஸ்டு தலைவரான டி. வி. தாமஸ் தெரிவித்திருக்கிறாராம்.

உத்தேசமில்லை — ஆனால்!

புதுடில்லி, மார்ச் 13—

நடப்பு ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து மேற்கொண்டு சர்க்கரை இறக்குமதி செய்யும் உத்தேசம் எதுவுமில்லையென்றும், ஆனால், 1954-ம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்கீழ் கப்பலேற்றப்படுவதற்கு எஞ்சியிருந்த சுமார் ரூ 81 இலட்சம் மதிப்புள்ள சர்க்கரை இவ்வருடம் ஜனவரி—பிப்ரவரி மாதத்தில் வந்துசேர்ந்த தென்றும் மத்திய உணவு—விவசாய மந்திரி டில்லி மாநிலங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

மாயூரம் ஆசிரியர் வேலாயுத மன்ற 5-வது ஆண்டுவிழா

12-3-56 காலை 10 மணிக்கு தோழர் இரா. வெள்ளியங்கிரி தலைமையில் மேற்படி விழா நடைபெற்றது. தோழர் அ. செங்குட்டுவன் ஆண்டு அறிக்கை வாசித்தார். தோழர்கள் என். கிட்டப்பா, சொர்ணம், முல்லை-சத்தி, மு கருணாநிதி ஆகியோர். ஆசிரியர் வேலாயுதத்தின் தொண்டு குறித்தும், இயக்கத்திற்கு அவர் ஆற்றியுள்ள அரும்பணிகள் பற்றியும் விளக்கவுரை யாற்றினர்.

அன்று மாலை 5 மணிக்கு, தோழர் வி. சங்கையன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் என். கிட்டப்பா, சொர்ணம், திருச்சி எம். எஸ். மணி, மு கருணாநிதி ஆகியோர் தற்கால அரசியல் நிலை பற்றியும் பொதுவேலை நிறுத்தத்தினால் நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ் நிலைகள் பற்றியும் விரிவுரையாற்றினர்.

தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கு உள்ளூர்-வெளியூர் தி. மு. கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்களின் சார்பில் ஏராளமான கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

கூட்டத் துவக்கத்தில் தோழர் ராஜன் குழுவினரின் இசை விருந்து நடைபெற்றது.

மதுரையில் கலை விழா

அண்ணா தலைமையில் நிகழ்ச்சிகள்

11—3—56 இரவு 10 மணிக்கு, மதுரை தமுக்கம் மைதானத்தில் அண்ணா அவர்கள் தலைமையில் கலை விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் — டி. ஏ. மதுரம் குழுவினர் 'விலங்கு மனிதன்' என்ற நாடகக் காட்சியை நடத்தினர்.

நடிப்பு - இசைப்புலவர் கே. ஆர். இராமசாமி, ராஜசுலோசனா குழுவினர் 'வேலைக்காரி' நாடகப் பகுதியில் சில காட்சிகளை நடித்தனர்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்—சகுந்தலா குழுவினரின் 'அசோகன்' ஓரங்க நாடகக் காட்சிகள் நடைபெற்றது.

நடிப்புச்செல்வர் எஸ். எஸ் இராசேந்திரன்—டி. வி. நாராயணசாமி குழுவினரின் 'மணிமகுடம்' நாடகத்தின் முக்கிய பகுதிகள் சில நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலை விழா நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர்.

தோழர் எஸ் முத்து அவர்கள் நடிகர்கள்—நடிகையருக்கும், ஆதரவு தந்த பொதுமக்களுக்கும் நன்றி கூறினார்.

இவ்விழா மூலம் செலவுகள் நீக்கி, ரூ. 6,500 நிதி தனக்கு உதவியதாகக் கூறினார்.

தலைவர் முடிவுரையில் கலைவிழா நிகழ்ச்சிகளைப் பாராட்டி, பொதுநல ஊழியம் செய்யும் உண்மை உழைப்பாளிக்கு மக்கள் பேராதரவு அளித்ததைப் பாராட்டினார்.

சென்னை—12-வது வட்ட தி. மு. கழகம்

13—2—56ல், கழகச் செயற் குழுக் கூட்டம் 39, நாராயணசராங் தோட்டத் தெருவிலுள்ள பணிமனையில் நடைபெற்றபோது, துணைச்செயலாளர் தோழர் பி. எஸ். அழகரசு அவர்களின் விலகல் மடலை ஏற்றுக்கொண்டும், தோழர் ஞா. இறைஒளி அவர்களை துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

அண்ணா தலைமையில்

விரப்பா-இராசாம்பாள் திருமணம்

மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றம் நகர விடுதியில் 12—3—56 காலை 10 மணிக்கு, அண்ணா அவர்கள் தலைமையில் எம். ஜி. ஆர். நாடக மன்றப் பொறுப்பாளர் தோழர் ஆர். எம். வீரப்பா—தோழியர் இராசாம்பாள் திருமணம் இனிது நடைபெற்றது.

மண விழாவிற்கு வந்திருந்த தோழர்களை தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் வரவேற்று, திருமண நிகழ்ச்சியை இனிது நடத்திவைக்கும்படி அண்ணா அவர்களைக் கேட்டுக்கொண்டு, மணமக்களை அறிமுகப்படுத்திவைத்து, மணமகன் திறமையைப் பாராட்டினார்.

தலைவர் முன்னுரை கூறியதும், மணமக்கள் மலர்மாலைகள் சூட்டிக் கொண்டு வாழ்க்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டனர்.

தோழர்கள் அ. பொன்னம்பலனார், எஸ். முத்து, கே. ஆர். இராமசாமி, எஸ். எஸ். இராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, ஏ. கே வேலன், டி. கே. சீனிவாசன், எம் ஜி சக்கரபாணி, ஏ. எஸ். கனகராசன் ஆகியோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர்.

பின்னர் அண்ணா அவர்கள் அறிவு விளக்கம் தந்தார்.

மணமக்கட்கு அன்பர்கள் வாழ்த்து மடல், பரிசுகள் வழங்கினர்.

மணமகன் ஆர். எம். வீரப்பா நன்றி கூறினார்.

கொழும்பு — இலங்கை தி. மு. க. கிளை

4—3—56ல், கழகப் பணிமனையில் தோழர் பி. எஸ். ஏ. கனி தலைமையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் இரா. பெரியண்ணன் அவர்களைச் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தும், ஏப் 8-ந் தேதியன்று கழக ஆண்டுவிழாவை தோழர் பி. எஸ். ஏ. கனி தலைமையில் நடத்துவதெனவும் ஆண்டு விழாக் குழு ஒன்றைத் தேர்ந்தெடுத்தும், மற்றும் பல முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஆலங்குடி தி. மு. கழகத் துவக்க விழா

அண்ணா, ஈ. வெ. கி. சம்பத் கலந்துகொண்டனர்

15—3—56 மாலை 7-மணிக்குப் பெருமாள் கோவில் திடலில், தஞ்சை மாவட்ட ஆலங்குடி தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக் கூட்டம், மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடைபெற்றது.

இதற்குமுன் கழகத் தோழர்கள் ஊர்வலமாக வரும்வழியில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கழகப் பண் பாடினர். தலைவர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

பின்னர் தோழர்கள் அ. பொன்னம்பலனார், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் பேசியபின், அண்ணா அவர்கள் தி. மு. க. கொள்கைகளையும், சமூக—அரசியல்— பொருளாதார விடுதலை குறித்தும், பிப். 20 அர்த்தால் பற்றியும் விளக்கினார். மாநில மாநாட்டுக்குப் பொது மக்கள் திரண்டுவந்து எதிர்கால வேலைத் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் பி. வி. துரைசாமி நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

மேக்கிரிமங்கலம் தி. மு. கழகத் துவக்க விழா

மாயூரம் வட்டம் மேக்கிரி மங்கலத்தில், 13-3-56-ல் தி. மு. கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் தோழர் இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் பிப் 20 பொது வேலைநிறுத்தத்தை ஒட்டி சிறைசென்று மீண்ட தி. மு. கழகத் தோழர்களான தம்புசாமி, கலியபெருமாள், கண்ணன், இராசு, ராமதாஸ், குப்புசாமி ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் தோழர்கள் கோ. சி. மணி, டி. வி. மணி, அறிவுடைநம்பி என். கிட்டப்பா ஆகியோர் சிறை சென்று மீண்டோரைப் பாராட்டியும், தி. மு. கழகத்தின் குறிக்கோள் பற்றியும் பேசினர்.

சங்கரநயினார்கோவிலில் தி. மு. க. பொதுக்கூட்டம்

எம். ஜி. இராமச்சந்திரன் சொற்பொழிவு

12—3—56 இரவு 7 மணி அளவில் இந்நகர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம், தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து, தோழர் அ. பொன்னம்பலனார் ஆகியோர் 20-ம் தேதி அர்த்தாலும், காமும்; அந்த அடக்க[illegible]கம் கையாண்ட தன்[illegible] முறை' ஆகியவை பற்றிப் [illegible]ர்.

[illegible]த்து, நீண்ட கைதட்டலுக்[illegible]டயே புரட்சி நடிகர் எம். ஜி. [illegible]ராமச்சந்திரன் சமுதாயம், பொருளாதாரம், அரசியல் என்ற முப்பெரும் பிரிவுகளையும், தமிழகக் கொள்கைகளையும் விளக்கிப் பேசினார். 'நாம் யார்?'—என்ற சிந்தனைதான் மனித வளர்ச்சியின் அடிப்படை என்றார். மேலும், 'சமுதாய, பொருளாதார மேம்பாடு தி. மு. கழகத்தின் தொண்டினால்தான் வளர்ந்து நமக்கு வாழ்வு தரும்' என்று வலியுறுத்தினார்.

இறுதியில் தி. மு. கழகத்தில் உறுப்பினராகவேண்டிய அவசியத்தை விளக்கி யாவரும் உறுப்பினராக சேரவேண்டும்படி கேட்டுக்கொண்டார்.

தோழர் சி. எல். பழனியப்பன் சிறிது நேரம் பேசினார்.

குறிப்பு:—தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம் கையெழுத்து வாங்கவிரும்புபவர்கள் 'நம் நாடு' வளர்ச்சி நிதிக்காக நான்கு அணா கொடுக்கவேண்டுமென்று நகர் தி. மு. கழக செயலாளர் டி. ஆர். எஸ். கேட்டுக் கொண்டதின்பேரில் வருவாய் ரூ. 4—4—0-ம் கிடைக்கப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

எம். ஜி. இராமச்சந்திரனுக்கு வரவேற்பு

திட்டக்குளம் ஆரம்பப் பாடசாலையின் சார்பில், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு வரவேற்பு மடல் வாசித்தளிக்கப்பட்டு மலர்மாலை சூட்டப்பட்டது. தோழர் எம். ஜி. இராமச்சந்திரன், வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

'தட்சிணப் பிரதேசத்தை ஆச்சாரியார் ஆதரிப்பது ஏன்?'

'சட்டசபையில் நிறைவேறிய தீர்மானம் என்னவாயிற்று?'

உறுப்பினர் வாரப் பொதுக்கூட்டத்தில் என். வி. நடராசன்

15—3—56-ல், சென்னை 47-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற தி. மு. கழக உறுப்பினர் வாரப் பொதுக்கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்பட்டுள்ளது:—

"தட்சிணப் பிரதேசத் திட்டத்தை இன்று ஆச்சாரியார் ஆதரித்துப் பேசுகிறார்; என்ன அவசியத்திற்காக என்பதை அவர் தெளிவாகச் சொல்ல மறுக்கிறார். தட்சிணப் பிரதேசம் போன்ற இரு மொழி, பல மொழி மாநிலங்கள் ஏற்பட்டால்தான் தம் போன்றோர் பதவிக்கு வரமுடியும் என எண்ணுகிறார். அதைத் தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும் தட்சிணப் பிரதேச அமைப்பை அவர் ஆதரிப்பதில்? தட்சிணப் பிரதேசம் பற்றி காமராசர் ஏதும் சொல்லாதிருப்பதை ஆச்சாரியார் கண்டிக்கிறார்; காமராசர் தெளிவான கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

"'தட்சிணம் பிரதேசத் திட்டத்தை ஆதரிப்பதற்குக் காமராசர் தயங்குவானேன்? தலைவர்கள்—காங்கிரஸ் தலைவர்கள் கூறிவிட்டால் நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டுவிடுவார்களே! அப்படியிருக்கும்போது, காமராசர், கழகங்களின் எதிர்ப்பிற்காக அஞ்சுகிறாரா? அப்படியானால் அவர் பயப்படத் தேவை இல்லை; கழகங்களின் எதிர்ப்பைச் சமாளித்து நாம் பலமுறை வெற்றி கண்டிருக்கிறோம்'—என்று, ஆச்சாரியார், காமராசருக்குத் தைரிய மூட்டுவதுபோல பேசியிருக்கிறார்.

ஆச்சாரியாரைக் கேட்க விரும்புகிறோம் — எப்போது இவர் கழகங்களின் எதிர்ப்பைச் சமாளித்தார்? விரலை மடக்கிக் கூற முடியுமா, ஆச்சாரியார், நம்மை வெற்றி கொண்டதாக!

"1938-ம் ஆண்டில் இந்தியைப் புகுத்தினார்—இதே ஆச்சாரியார், முதன் மந்திரியாக இருந்துகொண்டு! அப்போது தமிழர்கள் எதிர்த்தார்கள்; தமிழர் பெரும்படையின் — சுயமரியாதை இயக்கத்தின் இரு காளைகளின் உயிரை தனது அடக்குமுறை வெறிக்குப் பலியாக்கிக் கொண்டார், ஆச்சாரியார்; ஆயிரவர்க்கு மேலான தோழர்களைச் சிறைப்படுத்தினார்; ஆனாலும், முடிந்ததா அவரால் இந்தியைப் புகுத்திவிட? தோற்றோடிப் போகவில்லையா, அவர்? அதே ஆச்சாரியார், இப்போது நம்மையும், திராவிடர் இயக்கத்தவரையும் அழைத்து வைத்துக் கொண்டு, 'இந்தியாவின் பொதுமொழியாக இந்தி இடம் பெறக்கூடாது; ஆங்கிலம் தான் அமையவேண்டும்' என்ற தீர்மானம் நிறைவேற்றவில்லையா? இந்தியைப் புகுத்திய ஆச்சாரியார், இன்று, 'இந்தி கூடாது' என்று பேசுகிறார் என்றால், அதில் வெற்றி யாருக்கு?

"அதேபோலத்தான் ஆச்சாரியார், இரண்டாம் முறையாக இந்த மாநிலத்தின் முதன்மந்திரியாகப் பதவி பெற்றபோது, புதுக் கல்வித் திட்டம் என்ற பெயரில் வர்ணாச்சிரமக் கல்வித் திட்டம் ஒன்றைப் புகுத்தி, இந்த நாட்டு இளம் சிறார்களின் கல்விக் கண்ணை அவிக்கத் திட்டமிட்டார். அப்போதும் நாம் ஆச்சாரியாரை எதிர்க்க வேண்டிவந்தது; தி. மு. கழகம், பெரும் போராட்டமே நடத்தியது; பலமான அடக்குமுறைகளையும் 'தாங்கிக் கொண்டது; ஐயாயிரவர் சிறைப்பிடிக்கப் பட்டனர்; ஆறு பேர் சுட்டு வீழ்த்தப்பட்டனர்; அண்ணா உள்ளிட்ட அத்தனை முன்னணி வீரர்களும் சிறையிலடைக்கப்பட்டார்கள்.

"விளைவு என்ன ஆயிற்று? ஆச்சாரியார் வெற்றி பெற்றாரா? நமது எதிர்ப்பைச் சமாளித்தாரா? இல்லையே! பதவியிலிருந்தே அல்லவா ஓடவேண்டிய நிலை பிறந்தது? திட்டம் புதைகுழிக்கு அல்லவா அனுப்பப் பட்டது? தோற்றவர் ஆச்சாரியாரா? காமா?

"நிலைமை, கடந்தகால சம்பவங்கள், அப்படியிருக்கும் போது, ஆச்சாரியார், 'கழகங்களின் எதிர்ப்பைச் சமாளித்து விடமுடியும்' என்று ஏனோ பேசித்திரிகிறார்? தன் யோசனைப்படி நடக்குமாறு காமராசரைத் தூண்டுகிறார். தன் யோசனையான தட்சிணப் பிரதேசத்தை ஆதரித்து பகிரங்கமாகக் காமராசர் பேசாமலிருப்பதற்காக அவர் மீது கோபப்படுகிறார்; தன் திட்டத்தை ஆதரிக்கிற மந்திரி சபா

(2-ம் பக்கம் பார்க்க)

'தட்சிணப் பிரதேச யோசனையைக் கைவிடுக'

'தேவிகுளம்-பீர்மேடு தமிழகத்துடன் இணைய வேண்டும்'

வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றத் தீர்மானம்

வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றம், 'தட்சிணப் பிரதேசம்' என்ற சூதான யோசனையை எதிர்த்தும், தேவிகுளம்-பீர்மேடு தமிழ் வட்டங்கள் தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றி, தமிழர்தம் பாராட்டுதலைப் பெற முன் வந்திருக்கிறது.

சென்னை மாநிலத்தில் உள்ள பல மாவட்ட ஆட்சி மன்றங்களிலும், முதன் முதலாவதாக இத்தகு தீர்மானங்களை நிறைவேற்றியிருப்பது, வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றம்தான் என்பது குறிப்பிடத்தகுந்தது.

அரக்கோணம், மார்ச் 17—

வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றத் தனிக் கூட்டம் 'தட்சிணப் பிரதேச' முயற்சி குறித்தும், தேவிகுளம், பீர்மேடு தமிழகத்தோடு சேர்வது குறித்தும் விவாதிப்பதற்கு மன்றத் தலைவர் டி. பி. கேசவன் (ரெட்டியார்) தலைமையில் நடைபெற்றது.

தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி தீர்மானங்களைப் பிரரேபித்தார்; தோழர் ஆர். இராமசாமி ஆமோதித்தார்; 5 காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

தோழர் ஏ. எல். சி. கிருட்ணசாமி, தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

முடிவில் பிரச்சினை 'ஓட்'டுக்கு விடப்பட்டு தீர்மானத்திற்குச் சாதகமாக 19 வாக்குகளும், பாதகமாக 11 வாக்குகளும் கிடைத்தது. தீர்மானம் நிறைவேறியதாக தலைவர் அறிவித்தார்.

நேற்றையக் கூட்டத்தில் பலத்த போலீஸ் காவல் இருந்தது.

இந்தப் பிரச்சினைக்காக மட்டும் தனிக்கூட்டம் நடத்தி, தீர்மானங்களையும் நிறைவேற்றி, மத்திய சர்க்காருக்கும், மாகாண சர்க்காருக்கும் அனுப்பியது வட ஆற்காடு மாவட்டம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீர்மானத்தை முறியடிக்க வேண்டுமென்று காங்கிரஸ் உறுப்பினர்களில் சிலர் இரவு பகலாக, தேர்தலைப்போல் பாடுபட்டார்கள்; என்றாலும், தீர்மானங்கள் நிறைவேறியது.

காங்கிரஸ் நிர்வாகத்தில் ஊழல்கள்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பணத்தை, தனது ஊழல் நிறைந்த நிர்வாகத்தால் பாழாக்கி வருகிறதே? நாங்களும் எங்கள் பங்கிற்கு ஏதேனும் செய்யவேண்டாமா?'—என்று கேட்பது போலத்தான் இருக்கிறது, சென்னையிலும் உள்ள காங்கிரஸ் ஆட்சியின் இலட்சணம்!

சென்னை சர்க்கார் விவசாய இலாகா, ஊழல்களுக்கு இருப்பிடமாக இருக்கிறதாம்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை, ஒழுங்கீனங்களை—ஊழல்களை அம்பலப்படுத்துகிறது.

விவசாய இலாகாவில் ஒழுங்கீனங்கள் நிறைந்திருப்பதாகவும், நிர்வாகம் சீர்குலைந்திருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

விவசாயத்துறை அதிகாரிகளுக்குக் கடமை உணர்ச்சி இல்லை; அலட்சியப்போக்கு உடையவர்களாயிருக்கிறார்கள்.

மேலதிகாரிகள், கீழ் அதிகாரிகளைக் கண்காணிப்புச் செய்வதில்லை.

இலாகாவில் உள்ள ஒழுங்கீனங்களின் எண்ணிக்கை, இலாகாவின் திறமைக் குறையை அம்பலப்படுத்துகின்றன.

இலாகா சாமான்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள கிடங்குகளில் நிலைமைகள் ஒழுங்கீனமாக இருக்கின்றன.

இயந்திரக் கலப்பைகளை வாடகைக்கு விடுவது என்ற திட்டத்தின் கீழ், 1949-50-ம் ஆண்டிலிருந்து, ஆண்டுதோறும் ரூ. 10 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

கொய்னா மரவளர்ச்சித் தொழிலில் ஈடுபட்டிருப்பதில் சர்க்காருக்கு ரூ. 12 இலட்சம்வரை 1955-ம் ஆண்டு மார்ச்சு வரை சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

முத்துக் குளிப்பு நடவடிக்கைகளிலும் நஷ்டமே ஏற்பட்டிருக்கிறது.

இவைபோன்ற ஊழல்களை, அறிக்கை தெளிவுபட எடுத்துக் கூறுகிறது.

சென்னை—வரதராசபுரம்

கூட்டணிக் குழு

பொதுக் கூட்டம்

20—3—56 மாலை 6 மணிக்கு சென்னை — புதுப்பேட்டையைச் சேர்ந்த வரதராசபுரத்தில் (எம். ஐ. ஆர். ஐஸ் பாக்டரி அருகில்) திரு. வி. பி. எஸ். மணியர் தலைமையில் வரதராசபுரம் கூட்டணிக் குழு சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி - கல்யாணசுந்தரம் மற்றும் பலர் பேசுவர்.

பூண்டி தி. மு. கழகக் கிளைத் திறப்பு விழா

21—3—56 மாலை 6 மணிக்கு, பூண்டி மந்தவெளித் திடலில், திரு. சி. ஏ. வரதராசன் தலைமையில், தோழர் ஏ. எல். சி. கிருட்ணசாமி பூண்டி தி. மு. கழகக் கிளையைத் திறந்துவைப்பார்.

தோழர்கள் எம். கே. அம்பிகாபதி, அ. சுந்தரம், பூ. சி. பா. சு. மணி பேசுவர்.

பொதுச்செயலாளர் எச்சரிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைநீக்கக் கோருகிறார்கள்.

"அவர்களே தெரிவிக்கிறார்கள்—'எங்கள் கோரிக்கைகளை எல்லாம் ஒரேயடியாக நிறைவேற்ற வேண்டுமெனக் கோரவில்லை; சிறிது சிறிதாக முடிந்த அளவு, ஆண்டுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகவேனும் நிறைவேற்றுங்கள்'—என்று! அப்படியிருக்கும்போது சர்க்கார், ஏன் இவர்களது கோரிக்கைகளை அலட்சியம் செய்ய வேண்டும்?

இதுபோல, தொழிலாளர்கள் தங்களின் வாழ இயலாத நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, குறைகளை நிவர்த்திக்கக் கோரும்போது, சர்க்கார் வழக்கமாக ஒரு பதிலைத்தான் கூறி வருகிறார்கள்—'எங்களிடம் பணம் இல்லையே, என்ன செய்வது? நிதி நிலைமை சரியாக இல்லையே' — என்பதுதான் அந்தப் பதில்!

"சர்க்காருக்கு நாம் சொல்லுகிறோம்—கடந்த எட்டு, ஒன்பது ஆண்டுகளில் காங்கிரஸ் சர்க்கார் பாழாக்கியுள்ள பணம் எத்தனை கோடி ரூபாய்?

"நிர்வாகத் திறமையின்மையாலும், மக்களின் வரிப் பணமாயிற்றே என்ற அச்சமின்மையாலும், இந்தக் காங்கிரஸ் சர்க்கார் பாழாக்கியுள்ள பல கோடி ரூபாய் எத்தனை ஆயிரம் தொழிலாளர்களை வாழ்விக்கப் பயன்பட்டிருக்க முடியும்? சர்க்கார் யோசித்துப் பார்க்க வேண்டாமா?

"அண்மையில் நடைபெற்ற ஆவடி மாநாட்டின் பாதுகாப்பிற்காக மட்டும் சென்னை சர்க்கார் செலவிட்டது எத்தனை இலட்சம்?

"இந்தியப் பிரதமர் நேரு, கேரளம் செல்லும் வழியில் கோவை நகரைத் தொட்டுவிட்டுப் போனதற்காக மட்டும் சென்னை சர்க்கார் செலவிட்டது ஏறத் தாழ மூன்று இலட்சம் ரூபாய்!

"மந்திரிகள் ஓயாது ஒழியாது மாதத்திற்கு 20 நாள்—25 நாள் சுற்றுப்பயணம் செய்கிறார்கள்; அதனால் ஆயிரக்கணக்கான ரூபாய் பாழடிக்கப்படுகிறதே!

"மந்திரி ஒரு ஊருக்கு வருகிறார் என்றால், மாவட்ட நிர்வாக அதிகாரி, போலீஸ் அதிகாரி, இதர பரிவாரங்கள் அத்தனையும் அங்கு செல்லவேண்டியுள்ளதே! மந்திரி வருகிறார் என்பதற்காக ஒரு போலீஸ் அதிகாரி தன் இருப்பிடத்திலிருந்து ஒரு மைல் நகர்ந்தால் ஒன்பது அணா படி வாங்கிக்கொள்கிறார். இப்படி எத்தனை மைல் சென்றாலும் அந்த விகிதப்படி பணம் பெறுகிறார். இந்தமாதிரி எத்தனை அதிகாரிகள், ஒரு மந்திரியின் வருகைக்காகச் செல்கிறார்கள்!

"மந்திரிகளுக்கு சட்டசபையில், தினம் மூன்று மணி நேரம்கூட உட்கார்ந்திருக்க முடிவதில்லை; அலுவலக வேலைகளையும் கவனிக்க முடிவதில்லை; ஊர் சுற்ற மட்டுமே முடிகிறது!

"இவர்கள் ஊர் சுற்றுவதினால் ஏற்படும் உருவான பலன்தான் என்ன?—பல்லாயிரக் கணக்கான பணம் பாழாகிறது என்பதைத் தவிர?

"கோவை மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது கவர்னர் ஒரு கிணறு திறந்துவைத்தாராம்; எப்படிப்பட்ட கிணறு தெரியுமா?

"கிணறு ஒன்று வெட்டத் திட்டமிட்டபோது, கவர்னரை அழைத்து திறப்பது என்று முடிவு செய்து கவர்னரை அழைத்தார்களாம்; அவரும் ஒத்துக்கொண்டாராம்.

"கிணறு வெட்டத் துவங்கினார்கள்; வெட்டிக்கொண்டே இருந்தார்கள்; ஆனால் தண்ணீர் சுரக்கவே இல்லை. கிணறு திறக்க வேண்டிய நாளும் நெருங்கி வந்தது; ஆனால் தண்ணீர் வரவில்லை; எனவே, முதல் நாள் இரவோடு இரவாக மூன்று மைலுக்கு அப்பாலிருந்த குளம் ஒன்றிலிருந்து பிப்பாய்கள் மூலம் தண்ணீரைக் கொண்டு வந்து அந்தக் கிணற்றில் கொட்டி வைத்திருந்தார்களாம்; கவர்னரும் அந்தக் கிணற்றைத் திறந்துவைத்து விட்டு வந்திருக்கிறார். இந்த இலட்சணத்தில் நடைபெறும் காரியங்களுக்கு மக்களின் வரிப் பணம் ஆயிரக்கணக்கில் பாழாகிறது!

"இப்படிப் பாழாகும் பணமெல்லாம், தொழிலாளர்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

"'தொழிலாளர்கள் கோரிக்கை தருவது—நாம் அதை நிறைவேற்றுவதா? நம் கௌரவம் என்ன ஆகும்?'—என்று சர்க்காரிலுள்ள சிலர் நினைக்கக்கூடும். இந்தப் போலி கௌரவத்திற்காகத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை அலட்சியம் செய்யக்கூடாது.

"தொழிலாளர் கோரிக்கையை நிறைவேற்றினால், சர்க்காரை மக்கள் பாராட்டுவார்கள். 'நலன் பேணும் சர்க்கார்தான் இருக்கிறது' என்று கூறுவார்களே தவிர, 'தொழிலாளருக்கு சர்க்கார் அடி பணிந்துவிட்டது' என்று, எவரும் கூறமாட்டார்கள்.

"மனிதன் வாழவேண்டுமானால், என்ன என்னவெல்லாம், எவ்வளவு தேவை என்ற புள்ளி விவரத்தையும் தந்துவிட்டு, அந்த மாதிரி வாழ்வதற்கு—தொழிலாளர்கள் வாழ்வதற்கு சர்க்கார் வழிசெய்யாமலிருக்குமானால்; அது என்ன நியாயம்?

"எனவே, தொழிலாளர் தம் கோரிக்கைகளை ஆராய்ந்து, நியாயமானவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியது சர்க்காரின் கடமையாகும். அதை விடுத்து அடக்குமுறை கொண்டு இந்தத் தொழிலாளர்களை அடக்கிவிடலாம்: 27-ந் தேதி வேலை நிறுத்தத்தைத் தடுத்துவிடலாம் என எண்ணுவது, மமதையோடு பேசுவது விவேகமாகாது.

"27-ந் தேதியன்று இந்த மருத்துவமனைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வார்களேயானால், அன்று மக்களுக்கு—நோயாளிகளுக்கு ஏற்படக்கூடிய நிலைமைகளை சர்க்கார் எண்ணிப் பார்க்க வேண்டும். நோயாளிகளைக் கவனிக்க, ஒரு நாளைக்கு ஆளில்லையானால், எத்தகு அபாயங்கள் ஆபத்துக்கள் ஏற்படக்கூடும் என்பதை சர்க்கார் உணர்ந்தாக வேண்டும்; உணருவார்களேயானால், 27ந் தேதியன்று, மருத்துவமனைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் நடைபெறாமலிருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். தொழிலாளரின் கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வர வேண்டும். அலட்சியமும், தாமதமும் கூடாது."

மருத்துவமனைத் தொழிலாளர் கோரிக்கைகள்

1. மாதாந்திரச் சம்பளம் ரூ. 10—ரூ. 15—ரூ 18 என்பதை ரூ. 35 ஆக உயர்த்த வேண்டும்.
2. வாராந்திர விடுமுறை வேண்டும்.
3. தினசரி 8 மணிநேர வேலை நிர்ணயம் செய்து, அதிகப்படி வேலைக்கு 'ஓவர் டைம்' கூலி தருக.
4. கூட்டு அபராதம் விதிக்கக் கூடாது.
5. அபாய 'அலவன்ஸ்', 'அசுத்த அலவன்ஸ்' வேண்டும்.
6. முறையாக 'யூனிபாரம்' அல்லது யூனிபாரத்திற்காக அலவன்சாகப் பணம் வேண்டும்.
7. ஒரு ஆண்டு பணி புரிந்தவர்களை நிரந்தரமாக்கி 'பிராவிடெண்டு பண்டு' வசதி கொடுக்க வேண்டும்.
8. 'சர்வீஸ் கிராஜ்புடி' கொடுக்க வேண்டும்.
9. சங்கத்தை அங்கீகாரம் செய்ய வேண்டும்.
10. சங்க நடவடிக்கைக்காக பழி வாங்கக்கூடாது.
11. கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்; அல்லது தொழில் கோர்ட்டுக்கு அவற்றை அனுப்ப வேண்டும்.

சோக்கலிங்கம் மறைவு

திராவிடத் தலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற முத்தையா (முதலியார்) அவர்களின் மகனான எம். சோக்கலிங்கம் அவர்கள், கடந்த மார்ச் 12-ந்தேதியன்று தமது 45-வது வயதில் இயற்கை எய்தியது அறிய மிக வருந்துகிறோம்.

பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றத்திற்கு வாழ்வைத் தந்த முத்தையா அவர்களின் குமாரரான சொக்கலிங்கம் அவர்கள், சட்டக்கல்லூரியில் பேராசிரியராக இருந்துவந்தார்.

1912-ம் ஆண்டு மார்ச் 12-ல் பிறந்த அவர், 1932-ல் எம். ஏ. பட்டம் பெற்றார்; சட்டக் கல்லூரியில் பயின்று 1934-ல் பட்டம் பெற்ற பின், 1936-ல் வழக்கறிஞராகத் தொழில் துவங்கினார்; பின், 1942-ல் எம். எல். பட்டம் பெற்றார். அரசியல் சட்ட விவகாரங்களில் அவருடைய அறிவுத் திறனுக்காக அவருக்கு தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டது.

1954-ல் அவர் சட்டக் கல்லூரிப் பேராசிரியரானார்.

சிறிது நாள் நோய்வாய்ப்பட்டிருந்து திடீரென இயற்கை எய்திவிட்ட அவரை, இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குகிறோம்.

—ஆசிரியர்

நில நடுக்கத்திற்கு 130 பேர் பலி

லெபனானில், கடந்த 17-ந் தேதி இரவு கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டதின் விளைவாக 130 பேர் உயிரிழந்தனர் என்றும், 200 பேர்வரை காயமுற்றனர் என்றும் கூறப்படுகிறது.

நிகழ்ச்சிகள்

சென்னை சர்க்கார் மருத்துவமனைத் தொழிலாளர்கள் தங்களின் நியாயமான கோரிக்கைகளைச் சர்க்காருக்கு வற்புறுத்துவதற்காகக் கடந்த 17-3-56 மாலை சென்னை-நேப்பியர் பூங்கா மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தினர்.

துவக்கத்தில், ஸ்டான்லி மருத்துவமனையிலிருந்து மூவாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஊர்வலமாக, நகரின் முக்கிய வீதிகள் வழியாக வந்து மைதானத்தில் கூடினார்கள்.

கூட்டத்திற்குத் தொழிற் சங்கத் தலைவர் திரு. வி சக்கரை (செட்டியார்) எம் எல் சி. அவர்கள் தலைமை தாங்கினார்.

பின்னர், மருத்துவமனைத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த டி. ஆர். கணேசன், தொழிலாளர்தம் கோரிக்கைகளையும், அவற்றின் நியாயத் தன்மையையும் விளக்கி எடுத்துரைத்தார்.

அடுத்து தோழர் ஏ கோவிந்தசாமி எம் எல் ஏ அவர்கள், தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் சர்க்கார் காட்டும் அலட்சியப் போக்கைக் கண்டித்து உரை நிகழ்த்தினார்.

அடுத்து டாக்டர் பி. வரதராசுலு (நாயுடு) எம் எல் ஏ. அவர்கள் பேசினார்.

பின்னர், தோழர் கே. டி ராஜு எம்.எல் ஏ. அவர்கள், தொழிலாளர்களின் கோரிக்கைகளை சர்க்கார் நிறைவேற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

இறுதியாக தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கோரிக்கைகளை ஆதரித்து அரியதோர் கருத்துரை வழங்கினார்.

மருத்துவமனைத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில்—ஆண்களும், பெண்களுமாகக் கூடியிருந்தனர். தொழிலாளர்கள் மட்டுமின்றி ஏராளமான பொதுமக்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.